சார்பு நீதிமன்றம், இலால்குடி

முன்னிலை:– திருமதி.R.மோகனா, B.L.,

சார்பு நீதிபதி, இலால்குடி.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25 ம் நாள் சனிக்கிழமை

**I.A.No.5/2025 in OS.No.8/2018**

(CNR.No.TNTP180000132017)

பூமிநாதன் ......மனுதாரர்

//எதிர்//

1. ராமகிருஷ்ணன்
2. பிரசன்னா
3. முத்தையாபிள்ளை
4. சேதுராமன்
5. கல்பனா ....எதிர்மனுதாரர்கள்

இம்மனுவானது 23.10.2025 ஆம் தேதியன்று இறுதி விசாரணைக்காக இந்நீதிமன்றத்தின் முன்பு வந்தபோது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.P.மதியழகன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சண்முகசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், 4, 5 எதிர்மனுதாரர்கள் அசல் வழக்கிலேயே தோன்றாதரப்பினராகிவிட்ட நிலையில் இருதரப்பு வாத உரைகளை கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:42:32 +0530

**உத்தரவு**

மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் கண்ட காரண காரியங்களை ஏற்று, மனுதாரர்/வாதி தாக்கல் செய்யும் ஆவணங்களை காலதாமதத்தை மன்னித்து வாதி தரப்பு ஆவணங்களாக ஏற்று உத்தரவிடக்கோரி சிபிசி வகுமுறை 7 விதி 14(3) ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம் –

மனுதாரர் வழக்கின் வாதி ஆவார். இவ்வழக்கை மனுதாரர் பிரதிவாதிகள் மீது விளம்புகை மற்றும் நிரந்தர ஊறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் ஆவணங்களை இதன் ஓர் அங்கமாக ஏற்று படித்து கொள்ள வேண்டப்படுகிறது. மனுதாரர் இவ்வழக்கில் 08.07.2025 ஆம் தேதி சாட்சிய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளார். மேற்படி வாக்குமூலம் தாக்கல் செய்தபோது மனுதாரர் தரப்பு ஆவணங்கள் மனுதாரர் கைவசம் இல்லாததால், அதனை தேடி கண்டுபிடித்தும் தாக்கல் செய்கிறார். மேற்படி காலதாமதம் வேண்டுமென்றோ கெட்ட எண்ணத்துடனோ செய்யப்பட்டதல்ல. மாண்புமிகு நீதிமன்றம் காலதாமதத்தை மன்னித்து இம்மனுவுடன் தாக்கல் செய்யும் ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணங்களாக ஏற்று உத்தரவு செய்ய வேண்டியது அவசியமாகும். இல்லாவிடின் மனுதாரருக்கு பெருத்த கஷ்டமும், நஷ்டமும் ஈடு செய்ய முடியாத இழப்பும் ஏற்படும். எனவே இம்மனு தாக்கல்.

3. எதிருரையின் சுருக்கம் –

மனுதாரர் இம்மனுவில் கூறியுள்ள விஷயங்கள் அனைத்தையும்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:42:38 +0530

மனுதாரரே நிரூபணம் செய்ய வேண்டும். மனுதாரர் தன் மனுவில் 2 வது பாராவில் குறிப்பிட்டுள்ளது போல 08.07.2025 அன்று சத்திய நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது உண்மை, அத்துடன் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்பது உண்மை, பின்னிட்டு ஆவணங்களை தேடி கண்டு பிடித்து ஆவணங்கள் தற்போது தாக்கல் செய்யப்பட்டது என்பது பொய்யானது. வாதி பிராது தாக்கல் செய்யும் சமயம் சொல்லியுள்ள ஆவணங்கள் கைவசம் இருந்து ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்டுள்ளது அதனால் தற்போது தான் கிடைத்துள்ளது என்பது முற்றிலும் தவறானதாகும். மேலும் மனுதாரர் முதல்நிலை நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யும் சமயம் சில விஷயங்கள் தவறாக கூறப்பட்டுள்ளது என்றும் அதை திருத்தம் செய்ய கூடுதல் சாட்சிய வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று சில எழுத்து பிழைகளை சரி செய்ய தவறுகளை குறிப்பிடப்பட்டு அதை சரிசெய்து கூடுதல் வாக்கு மூலம் தாக்கல் செய்வதை ஏற்று உத்தரவு செய்ய வேண்டும் என மனுதாரர்ல குறிப்பிடப்பட்டுள்ளது நிலைக்கத்தக்கதல்ல. முதல் விசாரணையில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்து சாட்சியத்தை திருத்த வேண்டும் என்பது சட்டபடி இயலாத ஒன்றாகும். முதல் விசாரணையில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்ட பிறகு அத்துடன் பிராதுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறிப்பிட்டிருக்கலாம் ஆனால் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யாமல் தற்போது புதிதாக ஆவணங்கள் தாக்கல் செய்ய வேண்டி கொடுக்கப்பட்ட மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும் வாதி தரப்பில் ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட வேண்டுமென்றால் எந்த சட்டப்படி மனு தாக்கல் செய்ய வேண்டும் என்ற விவரம் குறிப்பிடபடவில்லை. மேலும் மனுதாரர் தரப்பில் தாக்கல்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:42:45 +0530

செய்துள்ள மனுவில் ஆவணப்பட்டியலில் 02.12.1867 நாராயணன் செட்டியார் கிரயம் பெற்ற பத்திரம் அசல் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அது குறிப்பீடு செய்யலாது காரணம் அது பதிவு செய்யப்படாத ஆவணம். மேலும் 2 முதல் 4 ஆவணங்களின் 3ம் எதிர்மனுதாரருக்கு கொடுத்த அறிவிப்பு கிடையாது. மற்ற ஆவணங்கள் 5 முதல் 11 ஆவணங்களில் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாதது. அதனால் அதை குறியீடு செய்ய இயலாத ஒன்றாகும். மற்ற ஆவணங்களில் ஆட்சேபனையுடன் குறியீடு செய்ய 3ம் எதிர்மனுதாரருக்கு ஆட்சேபனை இல்லை. மேலும் முதல் விசாரணை நிரூபண வாக்கு மூலத்தில் சொல்லியுள்ளதை இம்மாதிரியான மனுக்கள் மூலம் கொடுத்தால் நிரூபன வாக்குமூலம் செய்ய சட்டபடி இயலாத காரியம். எனவே மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யக்கோரி எதிருரை தாக்கல்.

**4.** தீர்வு காணப்படவேண்டிய பிரச்சனை – மனுதாரரின் மனு அனுமதிக்கத்தக்கதா?

**5.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சியம் எதுவும் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**6**. மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் மனுதாரர் தரப்பு வாதத்தினை நிரூபிப்பதற்கு தேவையான ஆவணங்கள் தற்போது தான் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதால் அதனை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னித்து அதனை பொறுத்து தாக்கல் செய்யும் வாசா1 சாட்சியத்திற்கான கூடுதல் நிரூபண வாக்குமூலத்தினை ஏற்றுக்கொண்டு மனுக்களை அனுமதித்து உத்தரவிட வேண்டும் என வாதிடப்பட்டது.

**7**. 3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதத்தில் மனுதாரர்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:42:52 +0530

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் மறுக்கப்படுவதாகவும் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் முதல் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம் என்பதால் அதனை சான்றாவணமாக குறியீடு செய்ய இயலாது என்றும் 2 முதல் 4 ஆவணங்கள் பற்றிய விபரங்கள் இந்த எதிர்மனுதாரருக்கு கொடுத்த அறிவிப்பில் கிடையாது என்றும் மற்ற ஆவணங்கள் இந்த வழக்கிற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்றும் மற்ற ஆவணங்களை ஆட்சேபணையுடன் குறியீடு செய்வதில் ஆட்சேபணை இல்லை என்றும் முதல்விசாரணை வாக்குமூலத்தினை திருத்தம் செய்ய சட்டப்படி இயலாது என்பதால் அதுகுறித்து தாக்கல் செய்துள்ள மனு தள்ளுபடி செய்யதக்கது என்றும் கூடுதல் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்யாமல் முதல்விசாரணை வாக்குமூலத்தினை திருத்தம் செய்ய இயலாது என்பதாலும் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்கு தொடர்புடையது இல்லை என்பதாலும் மனுதாரரின் மனுக்கள் தள்ளுபடி செய்யதக்கது என வாதிடப்பட்டது.

8. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்குகோப்புகள் அதனுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் பார்வையிடப்பட்டன. தற்போதைய மனுவின் மனுதாரரால் அசல் வழக்கு பி அட்டவணை சொத்தில் உரிமை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு வாசா1 சாட்சிய முதல் விசாரணை தொடர்ச்சிக்கான நிலையில் வழக்கு நிலுவையில் உள்ளது, தற்போதைய மனுவின் மனுதாரர் மற்றும் பிற நபர்களுக்கு எதிராக தற்போதைய வழக்கின் 3ம் பிரதிவாதி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மற்றொரு அவ எண் 9–2018 என்ற எண்ணில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு மேற்படி இரு வழக்குகளும் இணைந்த வழக்குகளாக



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:42:57 +0530

நடைபெற்று வருகிறது.

**9**. மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ள தற்போதைய வழக்கின் வழக்குரையில் தற்போதைய மனுவுடன் தாக்கல் செய்துள்ள முதல் ஆவணத்தின் விபரத்தினை எடுத்துரைத்துள்ளார். மேற்படி ஆவணத்தின் அசலை தற்போது விசாரணையின் போது கிடைத்ததாக கூறி தாக்கல் செய்துள்ளார். மற்ற ஆவணங்கள் மனுதாரர்/வாதியின் வழக்கினை நிரூபணம் செய்வதற்கு தேவையான ஆவணங்கள் என்று மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே மனுதாரர் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் உண்மைதன்மை மற்றும் அதன் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்கு உட்பட்டு மேற்படி ஆவணங்களை சாட்சிய சட்டவிதிகளின்படி மனுதாரர் தரப்பு வழக்கில் தாக்கல் செய்ய அனுமதியளிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**10**. எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரையில் ஆவணங்கள் குறித்து கூறியுள்ள ஆட்சேபணைகளை அசல் வழக்கில் இருதரப்பு விசாரணைக்கு பின்னிட்டு தீர்வு காணலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் மேற்படி ஆவணங்களை பற்றி குறுக்குவிசாரணையின்போது கேள்விகள் கேட்பதற்கு எதிர்மனுதாரருக்கு வாய்ப்புகள் உள்ளது என்பதால் மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொள்வதால் எதிர்மனுதாரருக்கு வழக்கில் உள்ள உரிமை மற்றும் நலன் எந்த வகையிலும் பாதிக்கப்படப்போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**11**. மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் முதல் ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணமாக இருப்பதால் இந்திய சாட்சிய சட்டவிதிகளின்படியும்



R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:43:03 +0530

நிலைநிறுத்தப்பட்ட சட்டவிதிகளின்படியும் மேற்படி ஆவணத்திற்கான முத்திரை தண்ட தீர்வை செலுத்தப்படாமல் அதனை தகுந்த சாட்சியமாக ஏற்க இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

**12**. மற்ற ஆவணங்களை பொறுத்து அதன் தொடர்புடைமை மற்றும் நிரூபணத்திற்கு உட்பட்டு வாதி தரப்பு வழக்கில் தாக்கல் செய்ய அனுமதியளிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. பதிவு செய்யப்படாத ஆவணங்களை நீதிமன்றத்தில் கோப்புகளாக இருப்பதற்கு அனுமதியளிப்பதால் மட்டுமே அதனை சான்றாக ஏற்றுக்கொண்டதாக கருத இயலாது. குறியீடு செய்யப்படும் ஆவணங்களை கூட அதனை நிரூபணம் செய்தால் மட்டுமே தகுந்த சான்றாவணமாக ஏற்கப்படும் என்பதால் மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை மனுதாரர் தரப்பு ஆவணமாக வழக்கில் தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினை மன்னித்து மனுவினை அனுமதிக்கலாம் என்று இந்த மனுவில் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**இறுதியாக**, மனு அனுமதிக்கப்படுகிறது. மனுவுடன் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை அதன் தொடர்புடைமை மற்றும் நிரூபணத்திற்குட்பட்டு ஆவணமாக ஏற்றுக்கொள்ள அனுமதியளித்து மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று **2025 ம் வருடம் அக்டோபர் மாதம் 23 ம் நாள்** அவையறிய பகரப்பட்டது.

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:43:09 +0530

சார்பு நீதிபதி,
இலால்குடி.

**சான்றாவணங்களின் பட்டியல்**

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம் – இல்லை.**

R.MOHANA Digitally signed by R.MOHANA Date: 2025.11.06 17:43:15 +0530

**சார்பு நீதிபதி,**

**இலால்குடி.**

Subordinate Court Lalgudi

**I.A.No.5/2025 in OS.No.8/2018**

Draft / Fair Order

**Date – 25.10.2025**